# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 29.11.2021 supeedsam.com supeedsam@gmail.com







# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வைத்து அடக்கி ஆளுகின்றது அரசாங்கம்

## ஜனா குற்றசாட்டு



(சுமன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைச் சாட்டாக வைத்துக் கொண்டு இந்த அரசு தமிழ் மக்களையும், ஊடகவியலாளர்களையும் அடக்கி ஆண்டு கொடிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

வட,கிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்தும், நீதி கோரியும் மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...

## ஊடகவியலாளர் தாக்குதல்: மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்






(சுமன்)

வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம், மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் என்பனவற்றின் ஏற்பாட்டில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று காந்திப் பூங்காவில் அமைந்துள்ள ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபி முன்றலில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் மீது இராணுவத்தினரால்

02 ஆம் பக்கத்தில்...

## கிண்ணியாவில் ஊடகவியலாளர் தாக்கல்
# தீவிர விசாரணை ஆரம்பம்



(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

கிண்ணியா பிரதேசத்தில் கடந்த 23ஆம் திகதி குறிஞ்சாக்கேணி அனர்த்தம் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் தாக்கப்பட்டமை தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா அல் அக்ஸா தேசிய பாடசாலைக்கு அருகில் கடந்த 23ஆம் திகதி குறிஞ்சாக்கேணி

02 ஆம் பக்கத்தில்...

## ஊடகவியலாளர் தாக்குதல்
# முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம்




(முல்லை. ஜீவா)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிராந்திய ஊடகவியலாளரும் முல்லைத்தீவு ஊடக அமையத்தின் பொருளாளருமான விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இராணுவ வீரர்கள் மூவர் முல்லைத்தீவு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்படி

02 ஆம் பக்கத்தில்...

# தீர்வு பிரச்சினைக்கு இந்தியாவுடன் இணையுமாறு அமெரிக்காவிடம் கூட்டமைப்பு வேண்டுகோள்



இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண இந்தியாவுடன் இணைந்து ஊக்கத்தை கொடுக்குமாறு அமெரிக்காவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அமெரிக்காவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

வொஷிங்டனில் இராஜாங்க திணைக்கள அதிகாரிகளுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையிலான சட்ட நிபுணர்கள்

02 ஆம் பக்கத்தில்...

# வடக்கு,கிழக்கில் நடந்த சம்பவங்கள் வன்மையாக கண்டித்துள்ள எதிர்க்கட்சி



(காந்தன்)

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் நடந்துகொண்ட விதத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வன்மையாக கண்டித்துள்ளது.

தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கில் ஆயுதப் படைகள் நடந்துகொண்ட விதம்

02 ஆம் பக்கத்தில்...

# அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும்

## இலங்கையிடம் ஐ.நா.வலியுறுத்தல்

நாட்டின் அனைத்துத்தரப்பினரையும் உள்ளடக்கிய ஆட்சி நிர்வாகம், சிறந்த குடிமைத்தொடர்பு மற்றும் அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும் என்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச்செயலாளர் காலித் கியாரி வலியுறுத்தியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# பாணின் விலை மீண்டும் அதிகரித்தது

(ராஜ்)

நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 450 கிராம் நிறையுடைய பாணின் விலையை 10 ரூபாவால் அதிகரிக்க பேக்கரி உரிமையாளர்களின் சங்கம் தீர்மானித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# ஒமிக்ரோன் வைரஸ் அச்சப்பட தேவையில்லை

கொரோனா வைரஸின் புதிய திரபான ஒமிக்ரோன் வைரஸ் இலங்கைக்குள் பரவும் ஆபத்து காணப்படுவதாக தெரிவிக்கும் இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன, இந்த வைரஸ் தொடர்பில் மக்கள் பீதியடைய தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

02 ஆம் பக்கத்தில்...
















## யாழ்ப்பாணத்தில்
# காஸ் அடுப்புகளும் வெடித்து சிதறுகின்றன

(யாழ்.கீதன்)

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்புசம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் தற்போது , காஸ் அடுப்புக்களும் வெடித்து சிதறும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு சம்பவம் நேற்றைய தினம் அம்பாறை, சாய்ந்தமருது பகுதியிலும் பதிவாகியிருந்தது.

02 ஆம் பக்கத்தில்...




## தீர்வு பிரச்சினைக்கு இந்தியாவுடன் இணையுமாறு அமெரிக்காவிடம்

தூதுக்குழு அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியது.

இந்த தூதுக்குழுவில் மூத்த சட்ட நிபுணர்களான கே.கனக ஈ.ஈஸ்வரனும் நிர்மலா சந்திரஹாசனும் அடங்கியிருந்தனர்.அவர்கள் மூவருமே அமெரிக்க அதிகாரிகளிடம் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அமெரிக்கா மீண்டும் இணையவிருக்கும் நிலையில், தீர்வு காணப்படாமல் இருக்கும் பொறுப்புக்கூறல் மற்றும் நீதிப் பிரச்சினைகளுடன் சேர்த்து தமிழ் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வொஷிங்டன் வலியுறுத்த வேண்டியது முக்கியமானதாகும் என்று சுமந்திரன் லண்டனில் இருந்து 'த இந்து' வின் செய்தியாளர் மீரா ஸ்ரீனிவாசனிடம் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவில் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்ட சுமந்திரன் லணடன் சென்று பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் கலந்தாலோசனையை நடத்தினார்.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பான மைய குழுவுக்கு ஐக்கிய இராச்சியம் தலைமை தாங்குகிறது.

ஜெனீவாவில் உள்ள பேரவையில் 2022 மார்ச்சில் நடைபெறவிருக்கும் கூட்டத்தொடரில் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் இலங்கை தொடர்பாக எழுத்துமூல அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவிருக்கிறார்.

நீண்டகால உள்நாட்டு போரில் இருந்து இன்னமும் மீண்டுகொண்டிருக்கும் இலங்கையில் அரசியல் தீர்வொன்றுக்காக பேச்சுக்களில் பங்கேற்கும் பிரதான சர்வதேச பங்காளியாக இதுவரையில் இந்தியாவே விளங்கும் அதேவேளை மேற்குலக வல்லாதிக்க நாடுகள் பொறுப்புக்கூறல் மற்றும் நீதி தொடர்பிலேயே அக்கறை காட்டுகின்றன.

புதிய அரசியலமைப்பு ஒன்றை வரைவதற்கான ராஜபக்ச அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மத்தியில் அரசியல் தீர்வொன்றுக்கான அவசர கோரிக்கைக்கு வலுச்சேர்க்க அமெரிக்காவை அழைக்கும் கூட்டமைப்பின் நகர்வு இடம்பெற்றிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.அதன் காரணத்தினால்தான் அரசியலமைப்பு வரைவு துறையில் நிபுணத்துவம் கொண்டவர்களை முழுவதுமாகக்கொண்ட தூதுக்குழு அமெரிக்கா சென்றது.

2009 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு நீதியான அரசியலமைப்பு இணக்கப்பாடு ஒன்றின் ஊடாக நிலையான அரசியல் தீர்வொன்றை காணவேண்டும் என்பதே கூட்டமைப்பின் குறிப்பாக அதன் தலைவரான முதுபெரும் அரசியல்வாதி இரா.சம்பந்தனின் முக்கிய கோரிக்கையாக இருந்து வருகிறது.

1987 ஜூலை இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கையின் விளைவாக கொணடுவரப்பட்ட இலங்கை அரசியலமைப்புக்கான 13வது திருத்தம் ஒரு அவசியமான நடவடிக்கை.ஆனால் போதுமானதல்ல என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடாகும்.மாகாணங்களுக்கு ஓரளவு அதிகாரங்களை உறுதிப்படுத்துகின்ற அந்த திருத்தத்தை இலங்கை அரசாங்கங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை.

மாகாணங்களுக்கு போதுமான அதிகாரங்களை பரவலாக்கம் செய்யாமல் தொல்லியல் அல்லது சூழல் பாதுகாப்பு செயற்திட்டங்களின் வடிவில் தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலப்பகுதிகளில் சிங்களவர்களை குடியேற்றி வடக்கு கிழக்கின் குடிப்பரம்பலை மாற்றும் அரசின் பாரிய முயற்சிகளை எம்மால் தடுக்கமுடியாது'என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## பாணின் விலை மீண்டும் அதிகரித்தது

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் சனிக்கிழமை (27) இரவு கூடிய போது கோதுமை மாவின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல காரணங்களால் பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலைகளை அதிகரிக்க தீர்மானித்திருந்தனர்.

சனிக்கிழமை (27) முதல் கோதுமை மாவின் விலையை அதிகரிக்க நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், பேக்கரி பொருட்களின் விலையும் பாரியளவில் அதிகரித்துள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கோதுமை மாவின் விலை அதிகரிப்புக்கு மேலதிகமாக, நாடளாவிய ரீதியில் பல பகுதிகளில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் காஸ் அடுப்புகளும் வெடித்து



அசம்பவத்துடன் இந்த மாதத்தில் மாத்திரம் 6 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

நேற்று (28) புத்தளம் ஆராய்ச்சி கட்டுவ பகுதியிலும் சிலிண்டர் தீப்பிடித்திருந்தது. சிலிண்டரை நீர் நிலைக்குள் தூக்கி வீசியுள்ளனர். அதனால், பாரிய அனர்த்தம் தவிக்கப்பட்டது எ

இந்நிலையில், வடக்கில் எரிவாயு அடுப்புக்கள் வெடித்து சிதறும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் உள்ள வீடொன்றில் எரிவாயு அடுப்பு நேற்று முன்தினம் (27) வெடித்து சிதறியிருந்தது , யாழ்ப்பாணம் கந்தரோடை பகுதியில் உள்ள வீடொன்றில் எரிவாயு அடுப்பு நேற்றைய தினம் வெடித்து சிதறியுள்ளது.

கந்தரோடை வீட்டில் எரிவாயு சிலிண்டர் சமையல் அறைக்கு வெளியே வைக்கப்பட்டு இருந்தமையால் , அடுப்பு வெடித்து தீ பிடித்த போது பெரும் அசம்பாவிதம் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

## ஒமிக்ரோன் வைரஸ் அச்சப்பட தேவையில்லை

ஒமிக்ரோன் என்கிற கொரோனா வைரஸ் புதிய திரிபொன்று பரவி வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. டெல்டா வைரஸைவிட 500 மடங்கு வேகமாக ஒமிக்ரோன் வைரஸ் பரவும் எனவும், இந்த வைரஸ் இலங்கைக்குள் பரவும் ஆபத்து காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒமிக்ரோன் வைரஸ் நாட்டுக்குள் பரவுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது. இந்த வைரஸ் தொடர்பில் மக்கள் அச்சப்பட தேவையில்லை எனவும் தெரிவித்தார். இது இலங்கைக்கு மாத்திரமல்லாது உலக நாடுகள் அனைத்தும் தற்போது முகங்கொடுக்கிற பாரிய சவால் எனவும் கூறினார்.

## அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகளின்

ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் காலித் கியாரி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த செவ்வாய்கிழமை நாட்டிற்கு வருகைதந்திருந்ததுடன், இலங்கையில் அவரது பணிகள் கடந்த வியாழக்கிழமையுடன் முடிவிற்கு வந்தன.

இலங்கையில் தங்கியிருந்த காலப்பகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, நீதியமைச்சர் அலி சப்ரி, எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் காலித் கியாரி சந்திப்புக்களை மேற்கொண்டார்.

இதன்போது நிறைபேறான சமாதானத்தை அடைந்துகொள்வதற்கான முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து பணியாற்றத்தயாராக இருப்பதை ஏற்றுக்கொண்டுள்ள அவர், அனைத்துத்தரப்பினரையும் உள்ளடக்கிய ஆட்சி நிர்வாகம், சிறந்த சிவில் சமூகத்தொடர்பு மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு விரும்பும் அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் அவசியம் தொடர்பிலும் வலியுறுத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி அவற்றை நிறைவேற்றுவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தயாராக இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இலங்கைக்கான விஜயம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள காலித் கியாரி, 'தற்போதைய மற்றும் கடந்தகால சவால்கள் குறித்தும் வாய்ப்புக்கள் தொடர்பிலும் இலங்கையின் பல்வேறுபட்ட தரப்பினரதும் அபிப்பிராயங்களைக் கேட்டறியமுடிந்தமை மெச்சத்தக்கதாகும். அதேவேளை சமாதானம் மற்றும் அபிவிருத்தி ஆகிய விடயங்களில் இலங்கையும் ஐக்கிய நாடுகள் சபையும் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றமையை அவர்கள் வரவேற்றமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்'என்று தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி 16 நிறைபேறான அபிவிருத்தி இலக்குகள் உள்ளடங்கலாக எதிர்வரும் 2030 ஆம் ஆண்டில் நிலையான அபிவிருத்தியை அடைவதற்கு எதிர்பார்த்துள்ள இலங்கைக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தயாராக இருப்பதாக இச்சந்திப்புக்களின்போது உறுதியளித்ததாகவும் காலித் கியாரி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு,கிழக்கில் நடந்த சம்பவங்கள்

நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் இராணுவ ஆட்சிக்கு இதுவொரு சிறந்த எடுத்துக்காட்டு என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த ஊடக சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில்;

வடக்கில் மக்களை மட்டுமல்ல ஊடகவியலாளரையும் படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். அதேவேளை, சிலர் கைதுசெய்யப்பட்டும் உள்ளனர். இந்த அராஜக நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றோம். இறந்தவர்களை நினைவேந்த அனைவருக்கும் உரிமை உண்டு. இதில் இன, மத, மொழி வேறுபாடு காட்டக்கூடாது' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் தற்போது நடப்பது காட்டாட்சி என்பதை வடக்கு, கிழக்கில் நேற்று அரச படைகள் நடந்துகொண்ட விதம் எடுத்துக்காட்டுகின்றது. போரில் இறந்தவர்களை அமைதியாக நினைவேந்த பல இடங்களில் நீதிமன்றமே அனுமதி வழங்கிய நிலையில் அதையும் மீறி இராணுவத்தினருடன் சேர்ந்து பொலிஸார் நடந்த கொண்ட விதத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். நாட்டில் இன ரீதியில் மத ரீதியில் மொழி ரீதியில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில் தமிழர்களுக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அவர்களை உள ரீதியில் மேலும் காயப்படுத்தக்கூடாது' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதன்போது தெரிவித்துள்ளார்.

## ஊடகவியலாளர் தாக்குதல்; மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்தும், அண்மையில் திருகோணமலை கிண்ணியாவில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும் அதற்கான நீதி கோரியும் மேற்படி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள், மதகுருமார்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோ.கரணாகரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், கிழக்கு மாகாணசபை முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம், மட்டக்களப்பு மாநகரசபைப் பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட மாநகரசபை உறுப்பினர்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன், கல்முனை மாநகரசபை உறுப்பினர் ராஜன் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஊடகங்கள் மிகதும், ஊடகவியலாளர்கள் மீதும் மேற்கொள்ளப்படுகின்ற அடக்குமுறைகளை நிறுத்து, தாக்குதலை மேற்கொண்டவர்களை உடனடியாகக் கைது செய், ஊடகவியாளர்களைத் தாக்காதே, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்காதே போன்ற கோசங்களை எழுப்பியவாறும், ஊடகவியலாளர்களைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதி, இராணுவ அடக்குமுறை ஒழிக, அரசே ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்து, சிறைப்படுத்தப்பட்ட ஊடகவியலாளர்களை உடன் விடுதலை செய், ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்திய இராணுவத்தினரைக் கைது செய் போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் ஆர்;பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபி முன்றலில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டமானது பின்னர் ஊர்வலமாக ஆரம்பித்து மணிக்கோபுரத்தின் ஊடக காந்திப் பூங்கா முன்நுழைவு வாயில் வழியாக காந்தி சிலையருகே சென்று அங்கும் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிண்ணியாவில் ஊடகவியலாளர் தாக்கல் தீவிர

பிரதேசத்தில் இடம்பெற்ற அனர்த்தத்தின் போது புகைப்படம் மற்றும் வீடியோக்களை எடுத்துக் கொண்டிருந்த வேளையில் திருகோணமலைரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த அப்துல்சலாம் யாசீம் தாக்கப்பட்டதாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

புகாரி சந்தியிலிருந்து கிண்ணியா தள வைத்தியசாலையை நோக்கி வந்துகொண்டிருந்த ஆர்ப்பாட்டத்தின் போது இளைஞர்கள் தன்னை தாக்கியதுடன் ஒளிப்பதிவு செய்த கையடக்கத் தொலைபேசியையும் அடித்து பரித்து சென்றுள்ளதாகவும் அம்முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சம்பவ இடத்தை பார்வையிடுவதற்காக ஊடகவியலாளரை அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமை தொடர்பில் இஇகூங காணொளி மற்றும் அவ்விடத்தில் இடம்பெற்ற தாக்குதலை பார்த்த மற்றும் தடுத்த சாட்சிகளை விசாரித்ததாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த தாக்குதல் தொடர்பில் திருகோணமலை நீதிமன்றத்தில் நாளை திங்கட்கிழமை அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்க உள்ளதாகவும் கையடக்கத் தொலைபேசி திருடப்பட்டமை தொடர்பில் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் ஊடகவியலாளர் தாக்கப்பட்டு கையடக்கத் தொலைபேசி திருடப்பட்டமை தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வைத்து அடக்கி ஆளுகின்றது

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் போராட்டமானது, முல்லைத்தீவில் இராணுவத்தினரால் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமைக்கும், திருகோணமலையில் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமைக்கும் மேலாக தற்போதைய அரசாங்கத்தின் முன்னைய ஆட்சியின் போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் என அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் நீதி கோரும் ஒரு போராட்டமாகவே இதனைப் பார்க்கின்றோம்.

ஊடகவியலாளர்கள் உண்மையை வெளியில் கொண்டு வருபவர்கள். உண்மையை விரும்பாத இந்த அரசினால் கடந்த காலங்களிலே இவ்வாறு ஊடகவியலாளர்களைப் படுகொலை செய்யப்பட்டிருப்பது மாத்திரமல்லாமல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் காரணம் காட்டி இந்த நாட்டிலே ஒரு இராணுவ ஆட்சியை அமைப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருப்பது கண்கூடாகத் தெரிகின்றது.

இதன் காரணமாக இறந்தவர்களைக் கூட நினைவு கூர முடியாமல் நாங்கள் நிற்கின்றோம். தெற்கிலே இறந்தவர்களைத் தாராளமாக நினைவுகூரக்கூடிய நிலை இருக்கும் போது வடக்கு கிழக்கிலே தமிழ் மக்களாகிய நாம் எமக்காக இறந்த ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாத ஒரு நிலையில் இருக்கின்றோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தைச் சாட்டாக வைத்துக் கொண்டு இந்த அரசு தமிழ் மக்களையும், ஊடகவியலாளர்களையும் அடக்கி ஆண்டு கொடிருக்கின்றது.

இந்த அரசிற்குச் சர்வதேசத்தினால் பல அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறிக் கொண்டிருக்கின்றது. அதன் நிமித்தம் அச்சட்டத்தை மாற்றியமைக்கவுள்ளதாக அரசு தெரிவித்திருக்கின்றது. தமிழர்களாகிய நாங்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றுமுழுதாக நீக்கி அரசியற் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்து வருகின்றோம்.

இந்த நாட்டிலே ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணி ஞானசார தேரர் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கின்றது. பல குற்றச் செயல்களைச் தமிழினத்திற்கு எதிராக கடந்த காலங்களில் செயற்படுத்தி வந்த அந்தத் தேரரை ஒரே நாடு ஒரே சட்டம் செயலணிக்கு நியமித்திருக்கின்றார்கள். புதிய அரசியலமைப்பினைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள். அந்தப் புதிய அரசியலமைப்பிலே ஒரே நாடு ஒரே சட்டம் என்ற போர்வையிலே சிங்களவர்களுக்கு ஒரு சட்டம் தமிழர்களுக்கு ஒரு சட்டம் என்றே அது உருவாகும் என அறிய முடிகின்றது.

13வது திருத்தச் சட்டம் வடகிழக்கிற்கு மாத்திரம் தேவையானது அல்ல. 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்ப்படுத்தி அதனூடாக மாகாணங்களுக்குரிய பொலிஸ் அதிகாரம் உட்பட அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் பட்சத்தில் தான் வடகிழக்கு மாத்திரம் அல்ல தெற்கில் கூட பொலிஸ் அதகாரங்களை அந்தந்த மாகாணங்கள் பயன்படுத்தி அவர்களின் பாதுகாப்பை அவர்களே உறுதிப்படுத்திக் கொள்வார்கள்.

எனவே சர்வதேசம் இந்த நாட்டில் நடப்பதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றது. நேற்றைய நிகழ்விற்கான தடைவிதிப்பினைக் கூட சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கின்றது. எனவே சர்வதேசம் இந்த நாட்டின் மீது ஒரு அழுத்தத்தை ஏற்படுத்தி இந்த நாட்டிலே அனைத்து மக்களும் சமமாக வாழ்வதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

இந்த அடக்குமுறை தொடருமாக இருந்தால் எமது போராட்டம் தொடர்ச்சியாக இருக்கும். நாங்கள் எப்போதும் ஊடகவியலாளர்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்று தெரிவித்தார்.

## ஊடகவியலாளர் தாக்குதல் முல்லைத்தீவில்

தாக்குதல் சம்பவத்தை கண்டித்து ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்தின் பல்வேறு ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகள் ,அரசியல் பிரமுகர்கள் ,சமூக செயற்பாட்டாளர்கள்,பொதுமக்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். முல்லைத்தீவு நகரப்பகுதியில் குறித்த கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்று வருகிறது.

ஊடகவியலாளர் மீதான தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், சித்திரவதைகளை உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும், ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் கோரி குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேபோல்,மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு.ஊடக அமையம், மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் என்பன இணைந்து மட்டக்களப்பில் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தன.

வடகிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதை கண்டித்தும் நீதிகோரியும் கண்டன ஆர்ப்பாட்டம் என்னும் தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா அருகில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபி அருகே நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள்,பல்சமய ஒன்றியங்களின் பிரதிநிதிகள்,சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள்,அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

# ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் கீழ்த்தரமான செயல்களை அரசு நிறுத்த வேண்டும்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன்

(சுமன்)

ஜனநாயகத்தை அழிக்க வேண்டுமாக இருந்தால் முதலில் ஊடகவியலாளர்களை அழித்துவிட வேண்டும் என்று நினைக்கின்றார்களோ தெரியவில்லை. இவ்வாறான கீழ்த்தரமான செயல்களைச் செய்யாமல் அரசு சரியான பாதையில் செல்ல வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

வடகிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்தும், நீதி கோரியும் இன்றையதினம் மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயகத்தின் தூண்களாக இருப்பவர்கள் ஊடகவியலாளர்கள். ஊடகவியலாளர்களைத் தாக்குவது, அழிப்பதென்பது ஜனநாயகத்தை அழிக்கின்ற செயலாகவே இருக்கின்றது. நேற்றைய தினம் மரணித்த உறவுகளை நினைவுகூருகின்ற தினத்தில் முல்லைத்தீவில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் மீது முட்கம்பி சுற்றப்பட்ட ஆயுதத்தினால் தாக்குதல் நடத்தியிருக்கின்றார்கள். இது ஊடக சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் விடுக்கப்பட்ட பேரச்சுறுத்தலாகும். இதே போன்று கிண்ணியாவிலும் ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தியிருக்கின்றார்கள்.

இந்த நாடு இராணுவ ஆட்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. சீனாவின் நண்பனாக இருக்கின்ற இலங்கை சீனாவின் பாணியில் ஒரு இராணுவ ஆட்சிமுறையை பின்பற்றுவதற்கு முற்படுவது போன்று தெரிகின்றது.



கடந்த காலத்திலும் பல ஊடகவியலாளர்களை நாங்கள் இழந்து நிற்கின்றோம். அவர்களுக்கான நீதி இன்னும் வழங்கப்படவில்லை. இந்த நாட்டில் நீதி, உரிமை, ஊடக சுதந்திரம் இருக்கின்றதா என்பதை சர்வதேசம் விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

இந்த நேரத்தில் விட்ட தவறுகளையே மீண்டும் மீண்டும் விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நாடு அதளபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. ஜனநாயகத்தை விட்டு வெளியேறி சர்வாதிகாரப் பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது.

ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாகவும், தூண்களாகவும் இருக்கும் ஊடகவியலாளர்களைத் தாக்கி அழிப்பதன் மூலமாக இந்த நாட்டின் ஜனநாயகத்தை அழிக்க வேண்டாம் என்று இந்த அரசாங்கத்திடம் உறுதியாகக் கேட்டுக் கொள்கின்றோம். இனியும் இவ்வாறான செயல்கள் நடக்கக் கூடாது.

இவையெல்லாம் ஊடகவியலாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல்கள். அவர்கள் துணிகரமாகச் சென்று செய்தி சேகரிக்க முடிதளவிற்கு ஸ்தம்பிதம் அடையச்செய்கின்ற செயற்பாடு நடைபெறுகின்றது. ஜனநாயகத்தை அழிக்க வேண்டுமாக இருந்தால் முதலில் ஊடகவியலாளர்களை அழித்துவிட வேண்டும் என்று நினைக்கின்றார்களோ தெரியவில்லை. இவ்வாறான கீழ்த்தரமான செயல்களைச் செய்யாமல் அரசு சரியான பாதையில் செல்ல வேண்டும்.

நல்லாட்சிப் பாதையில் செல்ல வேண்டுமே தவிர இராணுவ ஆட்சிப் பாதையில் செல்லக் கூடாது. இனியும் அடக்குமுறை வேண்டம். ஒடுக்குமுறை வேண்டாம். அவ்வாறு தான் செய்யப் போகின்றீர்கள் என்றால் இது ஜனநாயக நாடு அல்ல இராணுவ ஆட்சிதான் இங்கு நடைபெறப் போகின்றது என்பதைப் பிரகடணப்படுத்திவிட்டு செய்கின்றனவற்றைச் செய்யுங்கள். சர்வதேசம் அதற்குரிய தீர்ப்புகளைத் தரும்.

ஏற்கனவே உள்நாட்டுப்பொறிமுறை செயலிழந்த நிலையில் சர்வதேசப் பொறியில் சிக்கிய இந்த அரசு மீண்டும் மீண்டும் தவறுகளைச் செய்யக்கூடாது என்பதை எச்சரிக்கையாகவே சொல்லுகின்றோம் என்று தெரிவித்தார்.

# நாட்டில் வறுமை, கோலைகள், கோள்ளைகள் என்பன இடம்பெறுவதற்குக் காரணம் இந்த ஆட்சியாளர்களே

## புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் த.இன்பராசா

(சுமன்)

ஒரு நாட்டில் வறுமை, கொலைகள், கொள்ளைகள் என்பன இடம்பெறுவதற்குக் காரணம் அந்த நாட்டின் ஆட்சியாளர்கள் விடுகின்ற பிழைகளே. நல்லாட்சி அரசாங்கம் இருக்கும் போது இவ்வாறான பிரச்சனைகள் இந்த நாட்டு மக்களுக்கு வரவில்லை என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் த.இன்பராசா தெரிவித்தார்.

தற்கால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களாகிய நாம் காலா காலமாக ஏமாற்றப்பட்டே வந்தருக்கின்றோம். எமது நாட்டின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் பற்றிச் சிந்திப்பதாகவும் இல்லை, எமக்கான தீர்வினைத் தருவாதாகவும் இல்லை. எமது தமிழ் அரசியல்வரிகளும் ஆட்சிகள் மாற மாற அந்த ஆட்சியாளார்களின் பின்னே துணைபோய்க் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நாட்டின் ஜனாதிபதி செயற்படுகின்ற விதத்தைப் பாடத்தால் இந்த நாட்டில் அனைத்து மக்களும் கஸ்டத்திற்குள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த அரசாங்கத்தினால் விவசாயம் முடக்கப்பட்டு விட்டது. இனிவரும் காலத்தில் 40 வீதமான பெறுபேறுகளையும் விவசாயத்தில் பெற முடியாது. பொருளாதாரத்தில் முதுகெலும்பாகவுள்ள விவசாயத்தைக் கூட தற்போதை ஆட்சியாளர்கள் முடக்கிவிட்டார்கள். இவ்வாறு சென்றால் 2025 காலப்பகுதியில் பெரும் பசி பட்டினி, தற்கொலைக்குச் செல்லும் நிலைக்கு இந்த அரசாங்கம் கொண்டு வருகின்றது.



ஒரு நாட்டில் வறுமை, கொலைகள், கொள்ளைகள் என்பன இடம்பெறுவதற்குக் காரணம் அந்த நாட்டின் ஆட்சியாளர்கள் விடுகின்ற பிழைகளே. நல்லாட்சி அரசாங்கம் இருக்கும் போது இவ்வாறான பிரச்சனைகள் இந்த நாட்டு மக்களுக்கு வரவில்லை. பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல், விவசாயத்திலும் எவ்வித பிரச்சனையும் இல்லாமல் இருந்தது. ஆனால் இந்த அரசாங்கம் வந்ததன் பின்னர் அனைத்தையும் முடக்கி அனைத்து மக்களையும் வறுமை நிலைக்குத் தள்ளியுள்ளது.

ஒரு நாட்டின் வறுமையும், பொருளாதார வீழ்ச்சியுமே போருக்கு வழிவகுக்கின்றது. அதேபோன்று இந்த நாட்டை மீண்டும் அழிவுப்பாதைக்குத் தள்ளும் செயற்பாட்டிலேயே இந்த அரசாங்கம் ஈடுபடுகின்றது.

இந்த நாட்டின் ஜனாதிபதி தமிழ் மக்கள் அங்கீகரிக்காத ஜனாதிபதி பெரும்பான்மை சிங்கள மக்களினால் கொண்டுவரப்பட்ட ஒரு ஜனாதிபதி. இலங்கையில் இரண்டு நாடு இருக்கின்றது என்பதைத் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலின் போதே காட்டியிருக்கின்றார்கள். இதனை நாட்டிலும், புலம்பெயர் தேசத்திலும், சர்வதேச ரீதியிலும் இருப்பவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான நிலைகளில் எமது தமிழ் அரசியல்வாதிகள் மிகத் தந்திரோபாயமான முறையில் இதயசுத்தியுடன் செயற்பட்டு எமது தமிழ் மக்களுக்கான தீர்வு, பொருளாதாரம் என்பன தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். மீண்டும் மீண்டும் விட்ட பிழைகளை விடாமல் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இல்லாவிடில் கனடாவிலே சுமந்திரன் சாணக்கியன் அவர்களுக்கு நடந்தது போன்றே வடக்கு கிழக்கில் உள்ள அரசியல்வாதிகள் அனைவருக்கும் நடக்கும் என்று தெரிவித்தார்.

# குறிஞ்சாக்கேணி படகு விபத்து 7 வது மரணம் பதிவானது

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்த மரணங்களின் எண்ணிக்கை ஏழாக உயர்ந்துள்ளது. திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குறிஞ்சாக்கேணி பகுதியை சேர்ந்த ரபீஸ் பாத்திமா நபா வயது (06) சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினமிரவு உயிரிழந்துள்ளார்.

கடந்த 23.11.2021 அன்று காலை இடம் பெற்ற படகு விபத்தின் போது தி/கிண்ணியா அல் அஷ்கர் வித்தியாலயத்தில் தரம் 1 ல் கல்வி பயிலும் மாணவியே இவ்வாறு உயிரிழந்த சோக சம்பவத்தை மேலும் ஏற்படுத்தியுள்ளது. தனது தாயுடன் பாடசாலைக்கு செல்வதற்காக படகில் பயணித்த வேலையில் தாய் உயிர் தப்பிய நிலையில் கிண்ணியா தளவைத்தியசாலையில் இருந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார்.



குறித்த சம்பவம் தொடர்பில் தாயிடம் வினவிய போது 'எனது பிள்ளை சம்பவம் நடந்து ஆறு நாட்களாக கண்களை திறக்கவில்லை திருகோணமலை வைத்தியசாலையில் இருந்து இரவு மரணித்ததாக சொன்னார்கள்' என குறித்த பிள்ளையின் தாயான என்.பர்வீன் ஆழ்ந்த சோகத்துடன் கண்ணீர் விட்டழுதார்.இரு பெண் பிள்ளைகளில் சிரேஷ்ட பெண் பிள்ளையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் ஜனாசா கிண்ணியா நடுத்தீவு பொது மையவாடியில் இன்று(28) மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னார் ரபீஸ்,நூர்தீன் பர்வீன் ஆகிய தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியுமாவார். மொத்தமாக படகு விபத்தில் ஐந்து மாணவர்கள் உட்பட ஏழு பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உண்மையை மறைத்து அப்பாவிகளை கைது செய்வதை ஏற்க முடியாது

## முன்னாள் எம்.பி அப்துல்லா மஹ்ரூப்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உண்மையை மறைத்து அப்பாவிகளை கைது செய்வதாக இருக்கக்கூடாது அனுமதி கொடுத்ததற்காக நகரபிதா நளீமையையோ படகு ஓட்டுனரையோ கைது செய்ய முடியாது எனவும் முன்னால் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்கவினால் அடிக்கல் நடும் போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் அப்போது பாலத்துக்கான அடிக்கல் நடும் போது ஏன் என்னோடு தொங்கிக் கொண்டு வரவேண்டும் என முன்னால் பிரதியமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் அவரது இல்லத்தில் நேற்று (28) இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ன உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் முன்னால் பிரதமர் ரணில் உடன் குறிஞ்சாக்கேணி பாலத்துக்கு அடிக்கல் நடும் போது நிதி ஒதுக்கவில்லை என கூறியிருந்தார் இதற்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் எமது மக்கள் 100 வருடங்களுக்கு மேலாக அங்கீகரிக்கப்படாத பாதையில் பயணித்திருக்கிறார்கள் இதற்காக அனுமதியளித்தவர்களையும் படகு ஓட்டிகளையும் சிறையில் அடைக்க முடியாது இந்த பால புனரமைப்புக்கான கால தாமதம் ஏன் இதன் பிண்ணனி என்ன என்பதை நன்குணர்ந்து செயற்பட வேண்டும் இந்த புனரமைப்புக்கான கொந்



ராத்து வேலைகள் இரு கம்பனிகளிடம் கைமாற்றப்பட்ட நிலையில் மூன்று கோடி ரூபா பணமும் கைமாற்றப்பட்டுள்ளது .

நீதி நியாயயம் உண்மை வெளிவரவேண்டும் இதில் அரசியல் குளிர் காய்வதற்கு எனக்கு விருப்பமில்லை. கடந்த காலத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக செயற்பட்ட ரணில் விக்ரமசிங்கவின் மூலமாக 350 மில்லியனும் நெடுஞ்சாலை அமைச்சராக இருந்த ஹபீர் காசீம் அமைச்சின் மூலமாக 400 மில்லியனும் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது இது வெறும் பொய் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கூறுகிறார் ஒரு நாட்டின் பிரதம மந்திரி ஊடான அபிவிருத்தி திட்டத்துக்கான அடிக்கல் நடும் போது அவர் என்னோடு ஏன் தொங்கி கொண்டு வந்தார் எனவும் கேள்வி எழுப்பிய முன்னால் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் ஆறு மாத காலமாக புனரமைப்பு பணிகள் கொமிசன் என்ற பேரில் இழுத்தடிப்பு செய்யப்பட்டுள்ளது இதன் மூலமாக அப்பாவிகளை இதன் விவகாரத்தில் உள்ளுக்குள் தள்ளி தங்களை நியாயயப்படுத்துவதில் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றனர் என்றார்.

# நீதியைப் பெற்றுக் கோடுக்க போலிசாரும் அரசாங்கமும் பின்வாங்கக்கூடாது

## கிழக்கு ஊடக மன்றம்

(ரக்ஸனா)

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயற்படுபவர்கள், அவர்களை யாரும் தாங்கள் விரும்பும் விதத்திற்குச் ஏற்ப செயற்படுத்த முடியாது. மக்களுக்கான நீதி மறுக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், அவற்றை, தான் சார்ந்த ஊடகத்தின் வாயிலாக வெளிப்படுத்துவதற்கு ஊடகவியலாளர்களுக்கு பூரண உரிமையும் சுதந்திரமும் உண்டு.

அண்மையில் திருகோணமலையிலும், முல்லைத்தீவிலும் ஊடகவியலாளர்கள் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார்கள். இவற்றுக்கு கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் ( கிழக்கு ஊடக மன்றம்) தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றது.

கடந்த வியாழக்கிழமை (25) திருகோணமலையிலும், சனிக்கிழமை (2 %) முல்லைத்தீவிலும் ஊடவியலாளர்கள் மிகமோசமாகத் தாக்கப்பட்டமைக்கு கிழக்கு ஊடக மன்றம் கண்டனம் தெரிவித்து ஞாயிற்றுக்கிழமை (28) விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சுதந்திரமாகச் செயற்படும் ஊடகவியலாளர்களை ஆயுதங்களைக் கொண்டும், அச்சுறுத்தல் போன்ற ஏனைய விடையங்களைக் கொண்டும் அடித்து அடக்க முற்படும் செயலானது பேனா முனையுடன் நேரடியாகப் போராடும் திறனற்றவர்கள் என்பதையே சுட்டி நிற்கின்றது. கருத்துக்களைக் கருத்துக்களால் தான் வெல்ல வேண்டும். மாறாக பேனா முனைப் போராளிகளை ஆயுதம் கொண்டு அடக்கலாம் என நினைத்திருப்பவர்கள், அந்த சிந்தனையிலிருந்து முற்றாக விடுபட வேண்டும்.

இலங்கை ஜனநாயக ரீதியாக செயற்படும் நாடாகும் என்ற வகையில் ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து, ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் தரப்பினர், ஊடகவியலாளர்களை தாங்கள் நினைப்பதை அல்லது சொல்வதை மாத்திரம்தான் அறிக்கையிட வேண்டும் என அடக்கி வைக்க முயல்வதும் நினைப்பதும் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்

ஊடகவியலாளர்கள் உள்ளதை உள்ளபடி மக்களுக்கு வெளிக்காட்டுபவர்கள் அதனை தடுக்க முற்படுபவர்களை ஊடகத்துறை அமைச்சு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அண்மையில் திருகோணமலையிலம், முல்லைத்தீவிலும் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க பொலிசாரும் அரசாங்கமும் பின்வாங்கக்கூடாது.

குறிப்பாக, வடக்கு, கிழக்கிலுள்ள ஊடகவியலாளர்களை குறி வைத்து நசுக்க முற்படும் சந்தர்ப்பங்களை அரசு தடுக்க வேண்ம்டும் என்பதுடன், அரசு தக்க நடவடிக்கை எடுக்கவில்லையாயின் அது வேலியே பயிரை மேயும் எனும் செயற்பாட்டுக்கு ஒப்பானதாகும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


Seela Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto
Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# சர்வதேசத்திடம் நீதியைக் கேட்டு ஏமாற்றமும் அலைச்சலும் தான் தொடருகின்றது

## முன்னாள் பா.உ - பா.அரியநேத்திரன்

**(சுமன்)**

உண்மையான சர்வதேசம் எனின் இவ்வாறான அச்சறுத்தல்கள் ஊடகவியலாளர்களுக்கு இடம்பெறுகின்ற போது அதற்கான பிரதிபலிப்பினைக் காட்டி நீதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், ஏமாற்றமும் அலைச்சலும் தான் எங்களுக்குத் தொடருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

வடகிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்தும், நீதி கோரியும் நேற்றையதினம் மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டிலே தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும் தொடர்ச்சியாக இருந்து வருகின்ற விடயம். தற்போதைய ஜனாதிபதியின் அண்ணன் ஜனாதிபதியா இருந்த காலத்திலும் நாங்கள் பல ஊடகவியலாளர்களைப் பலி கொடுத்திருக்கின்றோம். சுமார் 45 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதில் 36 பேர் தமிழ் ஊடகவியலாளர்கள்.

தற்போதைய அரசாங்கம் பாராம் எடுக்கும் போது ஊடக சுதந்திரம் மதிக்கப்படும், ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படும் என்ற செய்தியையே சொல்லியிருந்தார்கள். ஆனால் அதன் செயற்பாடுகளைப் பாடத்தால் தொடச்சியாக ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதும், தாக்கப்படுவதுமாகவுமே இருக்கின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவம் பாராதுரமான மனித உரிமை மீறல் என்பதைச்




சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும். 2009ம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்ட காலத்தில் இருந்து சர்வதேசத்திடம் நாம் பலவற்றைத் தெரிவித்திருக்கின்றோம். தற்போது யுத்தமற்ற சூழலொன்று நடைபெறுகின்றது. இதன் போதும் பலவிதமான அச்சுறுத்தல்கள் இருக்கின்றதென்பதை எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். அத்தோடு ஊடகவியலாளர்களும் இது தொடர்பில் தெரியப்படுத்தி இருக்கின்றார்கள். ஆனால் சர்வதேசம் அழுத்தம் கொடுக்கின்றதா? மௌனம் காக்கின்றதா என்பது தெரியவில்லை.

உண்மையான சர்வதேசம் எனின் இவ்வாறான அச்சறுத்தல்கள் ஊடகவியலாளர்களுக்கு இடம்பெறுகின்ற போது அதற்கான பிரதிபலிப்பினைக் காட்டி நீதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறே மனித உரிமைச் செயற்பாடுகள் மாத்திரமல்லாமல் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கான நீதியையும் கேட்டு நிற்கின்றோம். இதுவரைக்கும் அதற்கான நீதி சர்வதேசத்தினூடாக எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஏமாற்றமும் அலைச்சலும் தான் எங்களுக்குத் தொடருகின்றது.

எனவே இந்தப் போராட்டத்தின் மூலம் சர்வதேசத்திற்கு ஒரு பார்வையைக் கொடுக்க வேண்டும். சர்வதேசம் இலங்கைக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். அதனூடாக இனியாவது ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் பாதிக்கப்படக் கூடாது. இறந்த பொதுமக்களை நினைவு கூருவதற்கான உரிமை தமிழ் மக்களுக்கு இருக்கின்றது என்ற செய்தியை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான அச்சுறுத்தல்கள் இனியும் தொடருமாக இருந்தால் இந்தப் போராட்டத்தைத் தொடர்சியாக முன்கொண்டு செல்வதைத் தவிர எங்களுக்கு மாற்றுவழி இல்லை என்று தெரிவித்தார்.

# தவிசாளர் விளையாட்டு மைதானக் காணியைச் சுற்றி வேலியிட்டு அடைத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்







**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப் பற்று (அரையம்பதி) பிரதேச சபைத் தவிசாளர் தருமரெத்தினம் தயானந்தன் என்பவர் கிரான்குளம் கடற்கரை வீதியில், அமைந்துள்ள கிரான்குளம் கதிரவன் விளையாட்டுக் கழகத்திற்குச் சொந்தமான பொது விளையாட்டு மைதானக் காணியைச் சுற்றி வேலியிட்டு அடைத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த விளையாட்டுக்கழக இளைஞர்கள் ஞாயிற்றுக்கிழமை(28) மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் கிரான்குளத்தில் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த கத்தான்குடி பொலசார் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடி ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்த முயன்றுள்ளனர். எனினும் தமது பிரச்சனைக்குத் தீர்வு வரும் வரையில் தாம் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளக் போவதாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.

அதிகாரிகள் நீதிக்கு மதிப்பளி உனது அதிகாரம் மக்களுக்கு அடாவடி அல்ல, உன்காணி என்றால் ஏன் இரவில் வேலி போடுகின்றாய், அதிகாரத்தைக் காட்டாதே, எமது மைதானத்தில் அடாவடி காட்டாதே, உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருதனர்.

இந்நிலையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் மட்டக்களப்பு மவாட்ட அமைப்பாளரும், மண்முனைப் பற்று (ஆரையம்பதி) பிரதேச அபிவிருத்திக் குழுவின் இணைத்தவலைவருமான பரமசிவம் சந்திரகுமார் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகைதந்து இளஞர்களின் கோரிக்கை தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். இவ்விடையம் தொடர்பில் தான் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஸவின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளதாகவும், இதற்காக எதிர்வரும் இரண்டு வராத்திற்குள் உரிய பிரதேச சபைத் தவிசாளரின் கையகப்படுத்தலிலிருந்து உரிய விளையாட்டு மைதானத்தை மீட்டு மீண்டும் கிரான்குளம் கதிரவன் விளையாட்டுக் கழக்திடம் ஒப்படைப்பேன் என உறுதிமொழி வழங்கியதை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

சந்திரகுமார் அவர்களின் கருத்துக்கு செவிசாய்த்து ஆர்ப்பாட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் தருவாயில் மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் திருமதி நமசிவாயம் சத்தியானந்தி மற்றும் கிராம சேவை உத்தியோகஸ்த்தரும் அவ்விடத்திற்கு வருகை தந்திருந்தனர். இளைஞர்களுக்கு தான் வழங்கிய உறுதிமொழி தொடர்பில் சந்தரகுமார் அவர்கள் பிரதேச செயலாளரிடம் தெரிவித்ததையடுத்து பிரதேச செயலாளரும் பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டார். தமது பொது மைதானத்தை இவ்வாறு பிரதேச சபைத்தவிசாளர் எல்லையிட்டு அடைப்பதாகத் தெரிவித்து கடந்த 22.11.2021 அன்று குறித்த மைதானக் காணியில் வைத்து விளையாட்டுக் கழகத்தினருக்கும், குறித்த தவிசாளருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டிருந்தவேளை அங்கு வருதைதந்திருந்த மண்முனைப் பற்றுப் பிரதேச செயலாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க பிறேமதிலக்க, காத்தான்குடி பொலிநிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி, ஸ்ரீ லங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் மன்முனைப் பற்று பிரதேசஅபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான பரமசிவம் சந்திரகுமார், அகியோர் இருசாரருடனும் கலந்துரையாடியிருந்தனர்.

தவிசாளரால் அடைக்கப்பட்ட நிலப்பரப்பின் ஒருபகுதி அரச காணி எனவும், ஏனையவை தனியார் காணி எனவும், அரச காணியை எல்லையிட்டு அடைக்கப்பட்டிருப்பதை உடன் அகற்ற வேண்டும் எனவும். இல்லையேல் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்படும் என பிரதேச செயலாளர் திருமதி சத்தியானத்தி நமசிவாயம் அப்போது தெரிவித்திருந்தார்.

இளைஞர்கள் அவ்விடத்தில் தொடர்ந்து விடையாடுமாறும் இது தொடர்பில் விடிளாயட வேண்டாம் என நீதி மன்ற கட்டளைவந்தால் விளையாட முடியாது என அதிகாரிகள் இளைஞர்களுக்கு ஆலோசனை வழங்கியிருந்தனர்.

இது இவ்வாறு இருக்க அதிகாரிகளின் கருத்துக்கு மதிப்பளிக்காமல் கடந்த வெள்ளிக்கிழமை(26.11.2021) இரவு குறித்த மைதானக் காணியை மீண்டும் முட்கம்பி வேலியிட்டு தவிசாளரினால், அடைத்து இளைஞர்களை விளையாடாமல் தடை ஏற்படுத்தியமையைக் கண்டித்தே தாம் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும், இன்னும் இரு வாரத்திற்குள் எமது மைதானத்தை எம்மிடம் நிரந்தரமாக ஒப்படைக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் கிரான்குளம் கதிரவன் விளையாட்டுக் கழகத்தினர் இதன்போது தெரிவித்தனர்.

தருமரெத்தினம் தயானந்தன் அவர்கள் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிராங்குளம் 9ஆம் வட்டாரத்தில் யானைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று மண்முனைப் பற்று பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில் முண்முனைப் பற்றுப்பிதேச சபைக்கு அப்போது சுயேட்சைக் குழு உறுப்பினர் ஒருவர் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில் கடந்த வருடம் அந்த சபையில் முன் வைக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் இரண்டு தவைகள் தோல்வியடைந்ததையடுத்து புதிய தவிசாளராகத் இந்த வருட முற்பகுதியில் தெரிவு செய்யப்பட்டவரே தருமரெத்தினம் தயானந்தன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### வானொலி அரச விருது விழா 2021

# ஜேவ்ரி ஜேபதர்ஷனுக்கு சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான விருது



இலங்கையில் வானொலி ஊடகத்துறையில் சேவையாற்றிக்கொண்டிருக்கும் கலைஞர்களைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அரச வானொலி விருது விழா2021 கடந்த திங்கட்கிழமை (22.11.2021) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இம்முறை வானொலி அரச விருது வழங்கல் விழாவில் நியூஸ்பெஸ்ட் செய்தி முகாமையாளர் ஜெவ்ரி ஜெபதர்ஷன் சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான விருதினை பெற்றுக்கொண்டார்.

# காரைதீவில் கலைஞர் சுவதம் கலைஞர் கௌரவிப்பு விழா!







**( வி.ரி.சகாதேவராஜா)**

கலாச்சார திணைக்களமும், காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தும் 'கலைஞர் சுவதம்' கலைஞர்களை கௌரவப்படுத்துகின்ற நிகழ்வு காரைதீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் வெள்ளியன்று இடம்பெற்றது .

இந்கழ்விற்கு அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி .எம் றின்ஸான், கலாசார உத்தியோகத்தர் ம. சதாகரன், கலாசார பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம் .மனோகரன்,அபிவிருத்தி உத்தியோகத்தர்களான வி.விக்னேஸ்வரன் ,சிவலோஜினி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலைஞர்களுக்கான பாராட்டுவிருதுகளும்சான்றிதழ்களும்பரிசில்களும் வழங்கி கௌரவப்படுத்தப்பட்டனர்.

# எமது நாடு மாத்திரம் அல்ல உலகில் பல நாடுகள் பொருளாதார பின்னடைவை சந்தித்துள்ளன

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

எமது நாடு மாத்திரம் அல்ல உலகில் பல நாடுகள் பொருளாதார பின்னடைவை சந்தித்துள்ளன. பல்வேறு நாடுகளின் அவிருத்திகள் மந்தகதியில் செல்கின்றன. இருந்தபோதிலும் எமது நாட்டில் மக்களுக்கு நல்ல பல திட்டங்கள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் ஜனாதிபதியும் பிரதமரும் முனைப்புடன் செயற்படுகின்றனர் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக சமுர்த்தி அருநலு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் அட்டன் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், சுயதொழிலுக்கான கடன் தொகை, பால் உற்பத்திக்கான கடன் தொகை, சிப்தொர புலமைப்பரிசில் நிதி போன்றன வழங்கி வைக்கும் நிகழ்வு (28) நேற்று அட்டன்



நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

எமது நாட்டில் மட்டும் விலைவாசி அதிகரிக்கவில்லை. உலகில் பல்வேறு நாடுகளிலும் விலைவாசி அதிகரித்துள்ளன. கொவிட் 19 கொரோனா தொற்றினால் உலகமே ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. உரம் இல்லாததனால்தான் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தேயிலை விளைச்சல் குறைந்துள்ளதாகவும் சிலர் ஊடகங்களில் மாத்திரம் கூறுகின்றார்கள். உரம் இல்லாமையினால் மரக்கறிகளின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை. எல்லோருக்குமே தெரியும் எமது நாட்டில் மட்டுமல்ல அயல் நாடுகளிலும் (இந்தியாவிலும்) மரக்கறி விலைகள் அதிகரித்துள்ளன. இதனால் இந்தியாவிலும் விவசாயிகள் பாரிய போராட்டங்களை முன்னெடுத்தனர். கடந்த ஒரு மாத காலமாக நுவரெலியா மட்டுமல்ல இலங்கை முழுவதும் தொடர்ந்து கடும் மழை பெய்து வருகின்றது. இதனால்தான் விவசாயம் மற்றும் தேயிலை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளன. உரம் தட்டுப்பாடு குறித்து இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேரடியாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். அது மட்டுல்லாமல் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஸ் பத்திரனவுடனும் பலமுறை பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருக்கின்றோம். அதற்கான தீர்வு கிடைத்துள்ளது. சிலர் வாய்க்கு வந்ததெல்லாம் பேசுகின்றார்கள். முதலில் எமது நாட்டின் நிலைமையைப் பற்றியும் தெரிந்துக்கொள்ள வேண்டும். நாட்டை ஆட்சி செய்வதே பாரிய கஸ்டமாக உள்ளது. நாட்டில் எந்த வருமானமும் இல்லை. அப்படி இருந்தும் கூட எமது நாட்டை பொறுத்தவரையில் அனைவருக்கும் கொவிட் 19 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்க மக்களுக்கு தேவையான உதவிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றன. எதிர்காலத்தில் சுயதொழிலை ஊக்கவித்து மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் பல்வேறு உபகரணங்கள், நிதி உதவிகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன. வரவு செலவு திட்டத்திலும் சுயதொழிலை ஊக்குவிக்க அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை எமது மக்கள் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT



# திருமலை கடற்பரப்பில் நங்கூரமிடும் சர்வதேச கப்பல்கள்

## சிறு மீன்பிடி தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

**திருமலை**
**ரவ்பீக் பாயிஸ்**

திருகோணமலை கடற்பரப்பில் நங்கூரமிடும் சர்வதேச கப்பல்களினால் சிறு மீன்பிடி தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை சாம்பல்தீவு சல்லி பிரதேச மீனவர்களே இவ்வாறு பாதிப்படைவதாக தெரிவிக்கின்றனர்.



திருகோணமலை கடற்பரப்பில் நங்கூரமிடப்படும் சர்வதேச கப்பல்கள் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் நங்கூரமிடாமல் கடற்பரப்பில் விரும்பியவாறு நங்கூரமிடுவதினால் சிறு மீன்பிடி தொழிலாளிகள் மீன்பிடிக்க முடியாமல் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளதாக தெரிவிக்கின்றனர் .

மேலும் தாம் மீன் பிடிப்பதற்காக கடலுக்கு செல்லும் பொது நங்கூரமிடப்பட்டிருக்கும் கப்பலை அண்டிய கடற்பரப்பில் மீன்பிடிக்க விடாமல் விரட்டுவதாகவும் அதையும் மீறி மீன்பிடியில் ஈடுபட்டால் இலங்கை கடற்படைக்கு அறிவித்து அவர்கள் மூலம் மீன் பிடிக்க தடை விதிக்கப்படுவதாக குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் இவ்வாறு வருகைதரும் சர்வதேச கப்பல்கள் ஒரு நேர காலம் இல்லாமல் பயணிப்பதட்கான எல்லை ஒன்று இல்லாமல் தாம் மீன் பிடிக்கும் பிரதேச எல்லையினுடாக பயணிப்பதினால் தாம் மீன் பிடிப்பதற்காக வலைகள் போட்டதன் பின்னர் இவ் சர்வதேச சரக்கு கப்பல்கள் பயணம் செய்வதினால் தமது மீன்பிடி வலைகள் வெட்டுப்பட்டு நாசம் அடைவதாக குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் இவ்வாறு திருகோணமலைக்கு வரும் சர்வதேச கப்பல்கள் திருகோணமலை கடற்பரப்பில் விரும்பிய இடத்தில் நக்க்கூரமிடுவதினாலும் இவ்வாறு மீன்பிடி வலைகள் நாசம் அடைவதாகவும் தெரிவித்த சல்லி மீனவர்கள்.

இவ்வாறு வருகைதரும் கப்பல்களில் பல கழிவுப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு வெலிக்கம்பிகள் போன்றவை கடலில் வீசப்படுவதினால் பல லட்சம் பெறுமதியான வலைகள் நாசம் அடைவதாகவும் இவ்வாறு சல்லி கடற்பரப்பில் தமது வலைகளில் சிக்குண்ட பாதுகாப்பு வேலி கம்பிகள் பலமணிநேர போராட்டத்





திற்கு பின்னர் தாம் கரைக்கு இழுத்து வந்ததாகவும் சில சந்தர்ப்பங்களில் தாம் மீன் பிடிக்க பயன்படுத்தும் வலையினை கடலிலே விட்டுச்செல்வதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் நங்கூரமிடுவதிற்கு பல கடற்பரப்புக்கள் இருந்த போதிலும் இவ்வாறு சிறு மீன்பிடி தொழிலாளர்கள் மீன்பிடிக்கும் கடற்பரப்பில் இவ்வாறு நங்கூரமிட்டு தமது வாழ்வாதாரத்தினை அழிப்பது மனவேதனை அடைவதாக சல்லி சாம்பல்தீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் கடந்த காலங்களில் திருகோணமலை கடற்பரப்பில் இலங்கை போக்குவரத்து பழைய வாகனங்களை மீன் இனப்பெருக்கத்திற்கு என கடலில் போடப்பட்டது அவ்வாறு போடப்பட்ட வாகனங்களினாலும் நீரோட்ட காலப்பகுதியில் பல அசௌகரியங்களுக்குள்ளாவதாகவும் இதனை ஒரு சவாலாக தமது வாழ்வாதாரத்தினை முன்னெடுத்து வருகின்ற நிலையில் இவ் சர்வதேச கப்பல்கள் நங்கூரமிடுவதினால் தாம் பெரும் நட்டத்தினை எதிர்நோக்குவதாக சல்லி சாம்பல்தீவு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்

இவ்விடயம் தொடர்பில் தாம் மீனவ சங்கங்கள் உடாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும் எமது ஜீவனோபாயத்தில் எவரும் அக்கறை கொள்ளவில்லையெனவும் நாட்டில் விவசாயத்தினை பின்தள்ளி அரிசி இறக்குமதி செய்யப்படுவது போல் மீன்பிடியினையும் இல்லாதொழித்து மீன் இறக்குமதி செய்யும் சூழ்நிலை உருவாக வழிவகுக்க வெண்டாம் என சல்லி சம்புத்தீவு மீனவர்கள் கேட்டுக்கொண்டதுடன்

இவ் மீன்பிடி பிரச்சினைக்கு அதிமேதகு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மண்=மற்றும் உரிய அதிகாரிகள் தீர்வினை பெற்றுத்தருமாறு மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமைனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# உபவேந்தராக நியமனம் பெற்ற பேராசிரியர் றமீஸ் அபூபக்கருக்கு மருதூரில் கௌரவமளிப்பு !!

நூருள் ஹுதா உமர்







இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 05 வது உபவேந்தராக இளவயதில் தெரிவு செய்யப்பட்ட அப் பல்கலைக் கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் சமூகவியல் துறையின் முதன்நிலை பழைய மாணவரும், சாய்ந்தமருதில் இருந்து முதற்தடவையாக உபவேந்தர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவருமான பேராசிரியர். கலாநிதி றமீஸ் அபூபக்கரை அவர் ஆரம்பக் கல்வி பயின்ற பாடசாலையான சாய்ந்தமருது கமு/கமு/ அல்- ஜலால் வித்தியாலயத்தில் வைத்து பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை இரவு பாடசாலை கூட்ட மண்டபத்தில் ஓய்வுபெற்ற அதிபரும், சாய்ந்தமருது பிளைங் கோர்ஸ் விளையாட்டு கழக தலைவருமான ஐ.எல். எம். மஜீத் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் இணைந்த வடகிழக்கு மாகாணசபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளருமான முழக்கம் ஏ.எல். அப்துல் மஜீத், கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எஸ். அப்துல் றஸாக், கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.எச்.எம்.அப்துல் மனாப், அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளன தலைவரும், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வை. ஹலிலுர் ரஹ்மான், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வர் ஏ.ஏ. வஸீர், பிராந்திய பாடசாலைகளின் அதிபர்கள், கல்விமான்கள், விளையாட்டு கழகங்களின் நிர்வாகிகள், சிரேஷ்ட விளையாட்டு வீரர்கள், பிளாங் கோர்ஸ் விளையாட்டு கழக நிர்வாகிகள், வீரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# கலாபூசணம் ஏ.பீர் முகம்மது எழுதிய 'எஸ்.பொன்னுத்துரை- முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும்" நூல் வெளியீட்டு விழா !





(நூருல் ஹுதா உமர்)

ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர் கலாபூசணம் ஏ.பீர் முகம்மது எழுதிய 'எஸ்.பொன்னுத்துரை- முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும்' நூல் வெளியீட்டு விழா சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலாளரும், சாய்ந்தமருது கலாசார அதிகாரசபையின் தலைவருமான எம். முகம்மது ஆசிக்கின் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலய கல்வி பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார். மேலும் விசேட அதிதியாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.ரிம்சான் கலந்து கொண்டார். நூலின் முதற்பிரதியை தொழிலதிபர் இக்ரா யூ சத்தார் பெற்று கொண்டதுடன் சிறப்பு பிரதிகளை ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் கலாபூசணம் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் மற்றும் அரசியல் ஆய்வாளர் எம்.எச்.எம்.இப்றாஹிம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

சாய்ந்தமருது கலாசார அதிகார சபையின் பிரதி தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் ஏ.எச்.ஏ. பசீரின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நஸீர், நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை முன்னைநாள் அதிபர் எம்.எம். றஹிம், அக்கரைப்பற்று பேஜஸ் புத்தக இல்ல நிறைவேற்றுப் பணிப்பாளர் சிராஜ் மஷ்ஹுர், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபிக்கா ஆகியோரின் கருத்துரைகள் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தத்தார்கள், கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தத்தார்கள், பிரதேச செயலக அதிகாரிகள், சாய்ந்தமருது கலாசார அதிகார சபையின் நிர்வாகிகள், இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், முக்கிய பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சம்பூர் போலிஸ் நிலையத்துக்குள் புகுந்த முதலை!

(எப்.முபாரக்)



திருகோணமலை மூதூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சம்பூர் பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்த முதலை ஒன்று நேற்று (28) திருகோணமலை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்டு உப்பாறு பாலத்திற்கு கீழாக உள்ள ஆற்றுப்பகுதியில் விடுவிக்கப்பட்டது.

இன்று பொலிஸ் நிலையத்தின் வாகன நிறுத்துமிடத்தில் குறித்த முதலை அடையாளங்காணப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் அறிவிக்கப்பட்டதை அடுத்து ஸ்தலத்துக்கு விஜயம்செய்த வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் மிகுந்த போராட்டத்துக்கு மத்தியில் குறித்த முதலையானது மீட்கப்பட்டு மீண்டும் நீர் நிலையொன்றில் விடுவிக்கப்பட்டது.

அருகில் உள்ள ஏரியிலிருந்து உணவு தேடி குறித்த முதலையானது பொலிஸ் நிலையத்திற்குள் வந்திருக்கக்கூடும் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அத்துடன் மழை காரணமாக பரவலான காணிப்பகுதிகளில் நீர் தேங்கியிருப்பதால் அங்கு இவ்வாறான ஆபத்தான விலங்குகள் மறைந்திருக்கக் கூடும் என்பதால் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸாரால் அறிவுறுத்தப்படுகின்றனர்.

# அறிவார்ந்த அரசியல் உரையாடலை மலையக அரசியல் தளத்தில் உருவாக்கும் நோக்கில் 'மலையக அரசியல் அரங்கம்' எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது

## முன்னாள் எம்.பி திலகராஜ் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

அறிவார்ந்த அரசியல் உரையாடலை மலையக அரசியல் தளத்தில் உருவாக்கும் நோக்கில் 'மலையக அரசியல் அரங்கம்'எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்று அவ்வமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்தார்

குறித்த அமைப்பு கடந்த 30 ஆம் திகதி உதயமானாலும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் தலவாக்கலையில் நேற்று (28.11.2021) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது தெளிவுப்படுத்தப்பட்டது.

மலையக அரசியல் அரங்கின் பிரதான அமைப்பாளர் ராமன் திருச்செந்துரன், செயற்குழுச் செயலாளர் நாகரட்ணம் கிருஷ்ணகுமார் ஆகியோரும் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

''அறிவார்ந்த அரசியல் உரையாடலை மலையக அரசியல் தளத்தில் உருவாக்குதல், அதனை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லுதல், மாவட்ட எல்லைகளைக் கடந்த மலையக அரசியலை முன்னெடுத்தல் ஆகியன அமைப்பின் பிரதான நோக்கமாகும்.'' - என்று திலகராஜ் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு மற்றும் தேர்தல் மறுசீரமைப்பு என்பன தயாரிக்கப்பட்டு வருகின்றன. நாடாளுமன்றத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, சமூகத்தில் அறிவார்ந்த கருத்தாடல்களை உருவாக்கி, சமூகத்தின் தேவை அறிந்து, அவர்களின் தேவைக்கேற்ப தேவையான யோசனைகளை இனிவரும் தேசிய மட்ட விடயங்களின்போது முன்வைப்போம். ஏனெனில் மக்களின் நிலைப்பாடுதான் பிரதிபலிக்க வேண்டும்.



மலையகம் சமூகம் நூற்றாண்டுகால அரசியல் சமூகம், அதற்கு அரசியல் அடையாளம் இருக்கின்றது. கூலி சமூகம் மட்டும் அல்ல. செனட் சபையில்கூட பிரதிநிதித்துவம் இருந்திருக்கின்றது. எனவேதான் அமைப்பின் சின்னமாக நடேசய்யர் மற்றும் அவரின் பாரியாரின் படங்களை பயன்படுத்தியுள்ளோம்.

மலையக அரசியல் அரங்கமானது, அரசியல் கட்சியாகவோ அல்லது தொழிற்சங்கமாகவோ பதிவுசெய்யப்படவில்லை. சமூக அரசியலை முன்னெடுப்பதற்கான அமைப்பு என்பதால் அதில் எவரும் இணையலாம். - என்றார் திலகர்.

# மடத்தடி மீனாட்சி அம்மனுக்கு மார்ச்சில் குடமுழுக்கு! கும்பாபிசேகத்திற்கான பொதுக்கூட்டம் டிச.19இல்.



( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்தின் மகா குடமுழுக்கு வைபவம் அடுத்தவருடம் (2022) மார்ச் மாதமளவில் நடைபெறும்.அதற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நேற்று(28)ஞாயிற்றுக்கிழமை நண்பகல் ஆலயபரிபாலனசபைத் தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் இடம்பெற்ற விசேட நிருவாகசபைக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

கூட்டத்தில், பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் ஆலய பரிபாலனசபை ஆலோசகர்களான வி.ரி.சகாதேவராஜா, வா.குணாளன் உள்ளிட்ட நிருவாகசபைஉறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

டிசம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திற்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல தமிழ்க் கிராமங்களிலுமுள்ள மீனாட்சிஅம்மன் அடியார்கள் சுதந்திரமாக கலந்துகொள்ள முடியும் எனவும், அன்றையதினம் அவர்களிலிருந்து மகா கும்பாபிசேகக்குழு உள்ளிட்ட பல உபகுழுக்களும் தெரிவுசெய்யப்படுமென ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் அங்கு பகிரங்கமாக அழைப்புவிடுத்து அறிவித்தல் விடுத்தார்.

நீண்டகாலமாக சமர்ப்பிக்கப்படாமலிருந்துவந்த 2014 தொடக்கம் 2020வரையிலான நீண்டகால கணக்கறிக்கையை கணக்காய்வாளர் அ.சுந்தரராஜன் சமர்ப்பித்தார். சபையோர் ஏற்றுகொண்டனர்.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் தூர்ந்துபோயிருந்த ஆலயத்திற்கானவீதியை பிரதமரின் 1லட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் கொங்கிறீட் வீதியாக புனரமைக்க ஏற்பாடுசெய்துதந்த நாவிதன்வெளி பிரதேசசபை உறுப்பினர் ரி.யோகநாயகன், திருக்கோவில் பிரதேசசபை உறுப்பினர் எஸ்.அரியநாயகம் ஆகியோருக்கு சபையில் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் புதிதாக நிருவாகசபைஉறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆலய செயலாளர் த.சண்முகநாதன் நன்றியுரை தெரிவித்தார்.

# வீதிகள் சமிஞ்சைகள் பாதசாரி கடவையின்றி மாணவர்கள் சிரமம்

## நற்பிட்டிமுனை கிட்டங்கி வீதியில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)





வீதிகள் சமிஞ்சைகள் பாதசாரி கடவையின்றி மாணவர்கள் சிரமப்படுவதுடன் விபத்துக்களும் அடிக்கடி ஏற்படுகின்ற சம்பவம் பதிவாகியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை கிட்டங்கி பகுதியை இணைக்கும் பிரதான வீதியின் இருமருங்கிலும் விழிப்பூட்டும் சமிஞ்சைகள் மற்றும் பாதசாரி கடவைகள் இன்மையினால் வீதியில் பயணம் செய்யும் மாணவர்கள் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் இப்பிரதேசத்தில் அதிகரித்துள்ள விபத்துக்கள் வாகனங்கள் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் முகமாகவும் பாதசாரிகளின் நலன் கருதி உரிய வீதி சமிஞ்சைகள் பாதசாரி கடவைகளை நிர்மாணிப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்படுகின்றனர்.

நற்பிட்டிமுனை அல் அக்ஸா பாடசாலை லாபீர் வித்தியாலயம் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்கின்ற மாணவர்கள் பிரதான வீதியை கடக்கின்ற போது இவ்வாறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கிட்டங்கி நற்பிட்டிமுனை பகுதியில் உள்ள வீதிகள் சமிஞ்சைகள் அழிவடைந்தும் காணப்படுவதுடன் புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வீதியின் இருமருங்கிலும் உள்ள வடிகான்களுக்கு மேலாக இடப்படும் கொங்கிரீட் மூடிகள் முறையாக போடப்படாமையினால் விபத்துக்களும் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன.எனவே இப்பிரதேசத்தில் அதிகரித்துள்ள விபத்துக்கள் வாகனங்கள் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் முகமாகவும் பாதசாரிகளின் நலன் கருதி இந்நடவடிக்கை துரித கதியில் முன்னெடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போதைய கொரோனா 3 அனர்த்த அச்சுறுத்தல் நிலையிலும் கூட வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இவ்வாறான செயற்பாட்டினை ஏனைய பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அசாதாரண சூழ்நிலை காரணமாக வீதியோரங்களில் வளர்ந்திருந்த பாரிய மரக்கிளைகள் வெட்டப்பட்டு வருகின்றன.

மக்களின் பாதுகாப்புக்கருதி குறித்த வேலைத்திட்டத்தினை வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி,சம்மாந்துறை, நிந்தவூர், பகுதிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் வீதிகளை சுத்தப்படுத்துவதுடன் வீதி போக்குவரத்திற்கு தடையாக உள்ள பாரிய மரகிளைகளை வெட்டி அகற்றி வருகின்றனர்.

# கண்டி பன்வில கலகிரிய தோட்டத்தில் தனி வீடுளை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழா

(க.கிஷாந்தன்)

கண்டி பன்வில கலகிரிய தோட்ட மக்களுக்கு புதிய வாழ்வு எனும் திட்டத்தின் கீழ் 20 தனி வீடுளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பிராஜா சக்தி நிறுவனத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தலைமையில் சனிக்கிழமை 2%.11.2021 இடம்பெற்றது.

கண்டி பன்வில கலகிரிய தோட்ட மக்களுக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களின் பணிப்புக்கு அமைய தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் 2 கோடி 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இவ் வீடமைப்பு திட்டம் செயறபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்க பணிப்பாளர், தோட்ட அதிகாரி, பிரதேசசபை உறுப்பினர்கள், இளைஞர்அணி அமைப்பாளர்கள், பிரஜாசக்தி செயற்திட்டத்தின் அதிகாரிகள் உட்பட முக்கியஸ்தர்கள் வரேவேற்கப்படுவதையும், பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு அடிக்கல் நாட்டப்படுவதையும், கலந்து கொண்ட பொது மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.




# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(சர்ஜுன் லாபீர்)

மகிழ்ச்சிகரமான கற்றலை ஊக்குவிக்கும் முகமாக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு அவுஸ்திரேலியா வெஸ்டன் கிரீக் காண்பரா ரோட்டரிக் கழகத்தின் அனுசரனையுடன் கல்முனை ரோட்டரிக் கழகத்தினால் கடந்த (26)அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தில் பாடசாலையின் அதிபர் எம்.எச்.எஸ் ஆர் மஜீதிய்யா தலைமையில் இடம்பெற்றது.

வசதி குறைந்த தாய்,தந்தைகளை இழந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்காக இலவசமாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.





இந்நிகழ்வில் கல்முனை ரோட்டரிக் கழகத்தின் தலைவர் புஸ்பராஜா, செயலாளர் சிவா மற்றும் கல்முனை ரோட்டரிக் கழகத்தின் முன்னால் பிரதித் தலைவர் தொழிலதிபர் நாசர் அவர்கள் உட்பட பாடசாலையின் அபவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் எஸ்.எல் அமீரே பாறுக் அவர்களும் மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இலவச கண் காது பரிசோதனை முகாம்









(கதிரவன் )

திருகோணமலை மின்சாரநிலைய வீதியில் இயங்கும் ஏணிணீனு விசேட தேவையுடையோர் அமைப்பினர் Vision Care நிறுவனத்தினரின் ஒத்துழைப்பில் கண் காது பரிசோதனை முகாமினை நேற்று 2021.11 28 ஞாயிற்றுக்கிழமை நடத்தினர்.

திருகோணமலை நகர சபை வளாகத்தில் நடமாடும் வாகனம் மூலமும் இதில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

விசேட தேவையுடைய சிறுவர்கள் பெருமளவில் கலந்து சோதனைகளை செய்து கொண்டனர்.

பொதுமக்களும் தமது பரிசோதனைகளை இலவசமாக செய்து கொண்டனர்.

# கிழக்கில் வெற்றிடமாகவுள்ள கல்வி உத்தியோகத்தர்களை நிரப்ப நடவடிக்கை

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள உதவிக்கல்விப்பணிப்பாளர் மற்றும் ஆசிரியர்ஆலோசகர் பதவிகளுக்கு தற்காலிகமாக பணியாற்ற பொருத்தமானவர்களை தெரிவுசெய்து நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் ஏற்பாட்டில் இச்செயற்பாடு வலயரீதியில் நடைபெற்றுவருகிறது.

ஆசிரியர்ஆலோசகர் வெற்றிடத்திற்கு 'வளவாளர்' (Resource Person) என்றும், உதவிக்கல்விப்பணிப்பாளர் வெற்றிடத்திற்கு 'இணைப்பாளர்' (Co - ordinator) என்றும் தற்காலிக நியமனம் வழங்கப்படுகிறது.

அந்தந்த வலயங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களை நியமிப்பதற்கான தெரிவை, வலயக்கல்விப்பணிப்பாளர்கள் மேற்கொண்டு மாகாணக்கல்விப்பணிப்பாளரின் அங்கீகாரத்தை பெறுமாறு கூறப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணபாடசாலைகளில் கடமையாற்றும் பொருத்தமான தரம்பெற்ற அதிபர்கள் ,ஆசிரியர்கள் இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுவருகிறார்கள்.

இவர்கள் பாடசாலை மேற்பார்வை கல்விஅபிவிருத்தி போன்ற செயற்பாடுகளில் ஏனைய நிரந்தரஆளணியினருடன் ஈடுபடுத்தப்படுவார்கள்.

# மன்னாரில் சனிக்கிழமை (27.11.2021) மேலும் 13 நபர்களுக்கு கோரோனா

( வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் சனிக்கிழமை (27.11.2021) மேலும் 13 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்தைத் தொடர்ந்து நவம்பர் மாதம் தொற்றாளர்களின் எண்ணிக்கை 505 ஆக உயர்ந்துள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளில் கடந்த சனிக்கிழமை (27.11.2021) 13 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் 6 பேருக்கும். பெரிய பண்டிவிரிச்சான் வைத்தியசாலையில் 3 நபர்களுக்கும். முருங்கன் மற்றும் வங்காலை வைத்தியசாலைகளில் தலா இருவருக்குமே இவ் தொற்று உறுதி செய்யப்பட்டள்ளது.

இதுவரைக்கும் இவ் நவம்பர் மாதம் 2% ந்திகதி வரை 505 நபர்கள் கொவிட் 19 தொற்றாளர்களாக பதிவாகியுள்ளனர்.

இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 2898 பேர் கொரோனா தொற்றாளர்களாக பதிவாகியுள்ளனர் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தனது நாளாந்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# கல்முனையில் முதியோர்களுக்கு குறைந்தபட்ச வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டம்

(றாசிக் நபாயிஸ், மருதமுனை நிருபர்)

முதியோர் சமூக பாதுகாப்பு நிதியினூடாக முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின்

நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 'வீடுகளில் வசிக்கும் முதியோர்களுக்கான குறைந்தபட்ச வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்' மற்றும் 'கிராமிய முதியோர் சங்கங்களை வலுவூட்டல்' எனும் கருத்திட்டத்திற்கு அமைய கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட முதியோர்களுக்கு கட்டில், மெத்தைகள் மற்றும் மூன்று கிராமிய முதியோர் சங்கங்களுக்கு தளபாடங்களை கையளிக்கும் நிகழ்வு கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆ.மதுசூதனன் அவர்களின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.





கல்முனைக்குடி பத்தாம் கிராம சேவகர் பிரிவில் உள்ள அல்-ஜஸீறா கிராமிய முதியோர் சங்கம், மருதமுனை மூன்றாம் கிராம சேவகர் பிரிவில் உள்ள மருதம் சிரேஷ்ட பிரஜைகள் சங்கம் மற்றும் நற்பிட்டிமுனை ஐந்தாம் கிராம சேவகர் பிரிவில் உள்ள அல்-அமீன் சிரேஷ்ட பிரஜைகள் சங்கம் போன்றவைகளுக்கு இப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் கே.ஜீ.லெனரோல் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் கணக்காளர் யூ.எல்.ஜவாஹிர்,

நிருவாக உத்தியோகத்தர், எம்.என். எம்.றம்ஸான், மாவட்டச் செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்சி.மகேஸ்வரன், முதியோர்களுக்கான தேசிய செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக சேவைப் பிரிவு உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சமுர்த்தி பயனாளிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரனால் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஜனாதிபதியின் சௌபாக்கியா வேலைத் திட்டத்தின் கீழ் சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் சுய தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும் சமுர்த்தி அருநலு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டானின் ஆலோசனைக்கமைய அட்டன் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், சுயதொழிலுக்கான கடன் தொகை, பால் உற்பத்திக்கான கடன் தொகை, சிப்தொர புலமைப்பரிசில் நிதி போன்றன நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வு 28 நேற்று அட்டன் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றபோது அட்டன் நகர சபைத் தலைவர் சடையன் பாலச்சந்திரன் உட்பட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துக்கொண்டனர்.









# மன்னாரில் பெய்துவரும் மழையால் பலர் இடம்பெயர்வு

(வாஸ் கூஞ்ஞ )

மன்னார் மாவட்டத்தில் பெய்துவரும் மழையின் காரணமாக மன்னார் பகுதியில் அதிகமான இடங்கள் பெரும் வெள்ளக்காடுகளாக தொடர்ந்து காட்சி அளிக்கிறது மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகப் பிரவுகளில் மன்னார் நகர் பிரதேச பிரிவிலுள்ள மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

மன்னார் பகுதியில் கடந்த 26ந் திகதி தொடக்கம் 28ந் திகதி வரை பெய்த கடும் மழையால் என்றும் இல்லாதவாறு பல இடங்கள் வெள்ளக் காடுகளாக காட்சி அளிக்கிறது

இதனால் மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் 130 குடும்பங்களைச் சார்ந்த 473 நபர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

அதாவது பேசாலை மேற்கு, தலைமன்னார் ஸ்ரேசன், துள்ளுக்குடியிருப்பு மற்றும் சிறுத்தோப்பு ஆகிய கிராம பிரிவுகளிலுள்ள மக்களே இடம்பெயர்ந்து நான்கு இடை தங்கள் நிலையங்களில் இருந்து வருகின்றனர்

அத்துடன் இவ் காலப்பகுதியில் இது வரை மன்னார் நகரப் பிரதேச பிரிவில் 3627 குடும்பங்களைச் சார்ந்த 12673 நபர்கள் இவ் வெள்ளப்பெருக்கால் பாதிப்பு அடைந்துள்ளனர் என மன்னார் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது

பல கிராமங்களிலிலும் வீடுகளில் பெருக்கெடுப்பால் பலர் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொண்டு நீரை வெளியேற்றும் செயல்பாடுகளில் இறங்கி இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது

# பெற்றோர்களுக்கு கோவிட் விழிப்புணர்வுக்கருத்தரங்கு!





(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் பெற்றோர்களுக்கான ''கொவிட்'' தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று நாவிதன்வெளி அன்னமலை தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

இரு தொகுதிகளாக நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு பாடசாலை அதிபர் சீ.பாலசிங்கன் தலைமை வகித்தார். சம்மாந்துறைவலய உதவிக் கல்விப்பணிப்பாளரும் பாடசாலை மேம்பாட்டுநிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா வளவாளராகக்கலந்துகொண்டு விளக்கமளித்தார்.

கருததரங்கை பாடசாலையின் சிரேஸ்ட ஆசிரியர் என்.கோடீஸ்வரன் நெறிப்படுத்தி தொகுத்தளிக்க உதவிஅதிபர் என்.வன்னியசிங்கம் கலந்துசிறப்பித்தார். ஆரம்பப்பிரிவு இடைநிலைப்பிரிவு பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

# நாவலரும் விபுலாநந்தரும் இலங்கையின் இருபெரும் ஆன்மீக முதிசோம்கள்!

## நாவலர் குருபூஜையில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜெகதீசன்









**(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)**

நல்லைநகர் நாவலர் பெருமானும், முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரும் இலங்கைத்திருநாட்டின் இருபெரும் ஆன்மீக முதிசொம்கள். இருவரது பணிகளையும் இளம்சந்ததியினருக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய கடமை எமக்குள்ளது.

இவ்வாறு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் தெரிவித்தார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142 ஆவது குருபூஜை தினவிழா(27) சனிக்கிழமை காலை காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நடைபெற்றபோது பிரதமஅதிதியாகக் கலந்துகொண்டுரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றமும் இணைந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை தினவிழாவை ஏற்பாடு செய்திருந்தது.

காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் திருமுன்னிலை வகிக்க, காரைதீவுப் பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

மங்கல விளக்கேற்றல் நந்திக்கொடியேற்றல் அறநெறிக் கீதம் குருபூஜை என்பன நடைபெற்றன.

இந்த நிகழ்விலே ஆன்மிக அதிதிகளாக காரைதீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய சிவஸ்ரீ சி.தியாகராஜக் குருக்கள், காரைதீவு ஸ்ரீ நந்தவனச் சித்திவிநாயகர் ஆலய சிவஸ்ரீ இ.மகேஸ்வரக் குருக்கள் ,காரைதீவு ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி ஆலய சிவஸ்ரீ சி.சாந்தரூபன் குருக்கள், பெரிய நீலாவணை ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய சிவஸ்ரீ ந.பத்மலோஜன்சர்மா ,காரைதீவு ஸ்ரீ மாவடிக் கந்தசுவாமி ஆலய சிவஸ்ரீ ச.கோவர்த்தனன்சர்மா, நாவிதன்வெளி ஸ்ரீ முருகன் ஆலய சிவஸ்ரீ சுபாஸ்கர் சர்மா ஆகியோர் கலந்துகொண்டு ஆசீர்வதித்தனர்.

மணிமண்டபத்தில், அரங்கநிகழ்வில் நாவலர்பெருமான் மற்றும் விபுலாநந்த அடிகளாருக்கு மாலை அணிவித்து சமயகுருமாரால் வேதபாராயணமும் ,தீபாராதனையும் நடாத்தப்பட்டது. அறநெறிமாணவர்களின் நாவலரின் பன்முகதரிசனம் மற்றும் உரைகள் இடம்பெற்ற அதேவேளை, விபுலாநந்தபணிமன்றம் சார்பில் அதன் முன்னாள்தலைவர் வி.ரி.சகாதேவராஜா சிறப்புரையாற்றினார்.

அங்கு மேலதிகஅரசஅதிபர் ஜெகதீசன் மேலும் உரையாற்றுகையில்:

எப்போதும் சிவசின்னங்களை அணியும் ஐந்தாம் பெரும் குரவர் அவர். சைவத்திற்கும் தமிழுக்குமாக வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர். பைபிளை மொழிபெயர்க்கின்ற ஆங்கிலப்புலமை அவருக்கிருந்தது. ஆறுமுகநாவலர் பெருமான் விபுலாநந்த அடிகள் அவர்களது ஆத்மாக்கள் எங்களை வழிநடாத்துகிறது என்ற நம்பிக்கைஇருக்கிறது.

நாம் சமயகுரவர்களை வணங்குகின்றோம். அவர்கள் வாழ்ந்த முறைகளை படித்திருக்கின்றோம். அதேபோன்று இவர்கள் வாழ்ந்து காட்டியுள்ளனர். விபுலாநந்தரும் நாவலரும் 19ஆம் நூற்றாண்டில் அவதரித்து பலசேவைகளை சமுகத்திற்காக ஆற்றியவர்கள் . அதற்காகவே இலங்கையின் தேசிய வீரர்கள் என்ற அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தபால்தலையும் வெளியிடப்பட்டிருக்கிறது. அன்றைய மேலைத்தேய அடக்குமுறை காலகட்டத்தில் பலசவால்களுக்குமத்தியில் பெரும்பணிகள் செய்த பெருமகான்களை நாம் மறக்கமுடியாது.

ஆன்மீக அரசியல்தலைவர்களை தேர்ந்தெடுப்பதில் நாவலர்பெருமானது வழிகாட்டல் இருந்தது. சேர்.பொன்.இராமநாதனை தெரிவுசெய்ததில் அவரது பங்களிப்பு நிறையவே இருந்தது. திறந்த கூட்டத்தில் ஆராய்ந்து செற்போர் நடாத்தி தீர்க்கமான முடிவடுப்பது அவரது தனிஇயல்பு.

இன்று வருவாயுள்ள பல ஆலயங்களின் நிருவாகங்கள் நீதிமன்றிவ் உள்ளன. ஆனால் அன்று ஆலயநிருவாகங்களை வழிநடாத்துவதில் ஆன்மீகத்தலைவர்கள் முன்னின்ற சந்தர்ப்பங்கள்இருந்தது. நாவலர்பெருமானும் அதில் தலையாய ஒருவர்.

தமிழகத்தில் பெருமானது பேச்சுத்திறமை கதாப்பிரசங்கத்தை கேட்டுவியந்து அவரை பல்லக்கில் ஏற்றி திருவாவடுதுறை ஆதீனம் 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியமை இலங்கைவாழ் மக்களுக்கு பெருமையானது.

இந்துகலாசார திணைக்களம் அம்பாறை மவட்டத்தில் சிறந்த ஆன்மீக கலைகலாசார விழுமியங்களின் பயிற்சிநிலையமாக இந்த விபுலாநந்த மணிமண்டபத்தை அங்கீகரித்திருக்கிறது. இங் இவ்வாறு தொடர்ச்சியாக சமயஆன்மீக நிகழ்வுகள் நடந்தேறிவருவது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்குமுரியது. அதற்காக பணிப்பாளர் உமாமகேஸ்வரன் மாவட்ட கலாசாரஉத்தியோகத்தர் ஜெயராஜி பிரதாப் போன்றோரைப்பாராட்டலாம்.

சைவத் தமிழர்களுக்கென்று ஒரு மதிப்புமிகு அடையாளம் தந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். பல்துறை ஆளுமைமிக்க தீர்க்கதரிசனப் பார்வை கொண்ட பெருமகனார் நமக்காகச் செய்த அரும்பணி சைவத்தமிழுலகம் என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகாது என்றார்.

ஆன்மிக அதிதிகள், விஷேட அதிதிகள் எனப் பலரும் கலந்து கொள்ளும் இந்நிகழ்விலே மாணவர்களின் ஆளுமைத்திறன் வெளிக்கொணர்வு நிகழ்வுகளும் அவர்களுக்கான பாராட்டு நிகழ்வும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி நிகழ்த்த, நன்றியுரையினை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஸ்ரீபிரியா கங்கைநாயகன் நிகழ்த்தினார். கலாசாரஉத்தியோகத்தர் பிரதாப் நிகழ்வை நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

# செஞ்சிலுவை சங்கம் திருகோணமலை கிளையினால் இரத்தானம் முகாம்






**(பைஷல் இஸ்மாயில் , கதிரவன்)**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை மாவட்ட கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இரத்ததான நிகழ்வு (28) நேற்று திருகோணமலை செஞ்சிலுவைச் சங்க மாவட்ட காரியாலத்தில் அகரம் அமைப்பின் அனுசரனையில் இடம்பெற்றது.

இலங்கை செஞ்சிலுவைச்சங்க திருகோணமலை மாவட்டக் கிளையின் நிறைவேற்று அதிகாரி வ.தர்மபவன் தலையில் இடம்பெற்ற இந்த இரத்ததான நிகழ்வு காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணிவரை இடம்பெற்றது. இதில் 60 இற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் பங்கேற்று தங்களின் இரத்தங்களை தானமாக வழங்கி வைத்தனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்ட இரத்தப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இடம்பெற்ற இந்த இரத்ததான நிகழ்வுக்கு இரத்த வங்கியின் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் கே.எம்.நழீம் மற்றும் தாதிய உத்தியோகத்தர் திருமதி எஸ்.தெய்வேந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்

# கல்விசாரா ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கேட்டறிந்து அதற்கு தீர்வு பெற்றுக்கொடுக்கும் கலந்துரையாடல்




**(பைஷல் இஸ்மாயில்)**

அம்பாறை மாவட்ட சம்மாந்துறை கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விசாரா ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கேட்டறிந்து அதற்கு தீர்வு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இலங்கை கல்விசாரா ஊழியர்கள் ஒன்றிணைந்த சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

சங்கத்தின் பிரதித் தலைவர் ஏ.எம். ஜெமில் தலைமையில் (27) அல் மர்ஜான் முஸ்லிம் பெண்கள் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஒன்றுகூடலின்போது கல்விசாரா ஊழியர்கள் எதிர்நோக்கும் பதவியுயர்வு , மேலதிக கொடுப்பணவு மற்றும் இரண்டாம் மொழி சிங்களம் போன்ற பல பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக்கொடுப்பதற்கான முடிவுகளும் எட்டப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சங்கத்தின் பிரதம செயலாளர் ஏ.கே.டபிள்யூ.விஜேயசேகர, அம்பாரை மாவட்ட செயலாளர் எம்.ஜே.எம்.சஜீத், சம்மாந்துறை கல்வி வலய இணைப்பாளர் எம்.முகம்மட் பௌஸான் உட்பட கல்விசாரா ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

# இன்று முதல் ஆலையடிவேம்பில் இரு தடுப்பூசி ஏற்றிக்கோண்ட 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு பைசர் தடுப்பூசி

**(வி.சுகிர்தகுமார் )**

இரு தடுப்பூசி ஏற்றிக்கொண்ட 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு பைசர் தடுப்பூசி நாளை முதல் வழங்கப்படும் என ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எஸ்.அகிலன் தெரிவித்தார்.

கடந்த ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் இரு தடுப்பூசியினையும் ஏற்றிக்கொண்டவர்களுக்கு மாத்திரமே குறித்த மூன்றாவது தடுப்பூசி ஏற்றப்படும் எனவும் கூறினார்.

அதாவது இரு தடுப்பூசியினை ஏற்றி மூன்று மாதங்கள் முடிவடைந்தவர்களுக்கு மாத்திரம் பைசர் தடுப்பூசி வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் கோளாவில் வைத்திய சிகிச்சை நிலையத்திலும் இன்று (29)காலை 8 மணிமுதல் நண்பகல் 1 மணிவரை இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஆகவே 60 வயதிற்கு மேற்பட்ட இரு தடுப்பூசியினை ஏற்றி மூன்று மாதத்தினை பூர்த்தி செய்தவர்கள் மூன்றாவது தடுப்பூசியினை பெற்றுக் கொண்டு கொரோனா தொற்றிலிருந்து விடுபடுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.



# நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிக்கண்ட போதிலும் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் கைவிடப்படவில்லை

**(க.கிஷாந்தன்)**

கொரோனா தொற்று காரணமாக முழு உலகமும் பொருளாதாரத்தில் வீழ்ச்சி கண்டுள்ளது. இந்நிலையில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டாலும், இந்த நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ அவர்களும், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸ அவர்களும் எந்த ஒரு அபிவிருத்தித்திட்டத்தினையும் கைவிடவில்லை என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.





சமூர்த்தி அருணலு எனும் திட்டத்தின் கீழ் அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமூர்த்தி குடும்பங்களுக்கு வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கிணங்க 20 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், இரண்டு குடும்பங்களுக்கு லொத்தர் சீட்டிலிப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி கையளிப்பு, இரு மாணவர்களுக்கு சிப்தார என்ற புலமைப்பரிசில் நிதி கையளிப்பு, மேலும் இரு குடும்பங்களுக்கு மலசலகூடம் பெற்றுக்கொள்வதற்கான நிதி வழங்கல், மற்றும் பொருளாதார விருத்திக்காக கடன் வழங்கல் உள்ளிட்ட நிகழ்வுகள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஸ்வரன் தலைமையில் நேற்று (28) திகதி அட்டன் டிக்கோயா நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பகமுவ பிரதேச செயலக அதிகாரிகள், நுவெரலியா மாவட்ட செயலக அதிகாரிகள், அட்டன் டிக்கோயா நகர சபை தலைவர், உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்டு பொருட்களை வழங்கி வைத்து மக்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்.. நாட்டினுடைய பொருளாதாரத்தினை உயர்த்த வேண்டும் என்பதற்காக இந்த வருட வரவு செலவு திட்டத்திலும் பாரிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்காக இந்த வருட வரவு செலவு திட்டத்தில் நிதி அமைச்சர் பல மில்லியன் ரூபாய்களை ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தினை கிராம மட்டத்திலிருந்து கட்டியெழுப்புவதற்காக எதிர்காலத்தில் நாம் வெளிநாட்டினை நம்பியிருக்க கூடாது என்பதற்காகத்தான் அவ்வாறான ஒரு திட்டத்தினை முன்னெடுத்துள்ளார்.

அவ்வாறான ஒரு நிலையில் தான் இரண்டு வாரங்களுக்கு முன் பொகவந்தலாவ பகுதியில் பல மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை பெற்றுக்கொடுத்தோம். அதற்கு சமூர்த்தி அமைச்சின் ஊடாகவும் ராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்கள் ஊடாகவும் நிதி பெற்றுக்கொடுக்கப்பட்டன. ஆகவே இந்த சுயதொழில் ஊடாக வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவே பல லட்சம் ரூபா நிதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. அதே போன்று தான் இன்றும் பல சுயதொழிலாளர்கள் தெரிவு செய்து பொருட்கள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. இதன் நீங்கள் உங்கள் வாழ்க்கை தரத்தினை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்பதே எமது அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

கொரோனா தொற்று பரவல் காரணமாக பல நாடுகள் அபிவிருத்தி திட்டங்களை நிறுத்தியிருக்கின்றார்கள். ஆனால் நாம் நாட்டில் கொரோனா காலத்தின் போது எல்லோருக்கும் நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன் இன்று அனைவருக்கும் தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

இன்று பலர் விலைவாசிகள் சம்பந்தமாக சொல்கிறார்கள் நம்நாட்டில் மாத்திரம் விலைவாசி உயரவில்லை. மரக்கறி விலைவாசிகள் அதிகம் என்றும் உங்களுக்கு தெரியும். நுவரெலியா மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினால் மரக்கறிகள் பாதிக்கப்பட்டன. இது நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டன. நுவரெலியா மாவட்டத்தில் உரம் இல்லாத பிரச்சினைகள் காணப்பட்டன அதனை நாங்கள் ஜனாதிபதியிடம் பேசி இப்போது தீர்வுகளை பெற்றுக்கொடுத்துள்ளோம். சிலர் உரம் இல்லை என்பதனை மரக்கறி விலை என்பதனையும் ஊடகங்களூடாக தெரிவித்தார்களே ஒழிய அவர்கள் அதற்காக எதுவும் செய்யவில்லை.

இன்று நாடு பொருளாதார ரீதியாக பாரிய அளவில் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது. நாடு கொண்டு செல்வதற்கே சிக்கலான நிலையில் நாட்டு மக்களுக்காக பல்வேறு பணிகளை முன்னெடுத்துள்ளது. எனவே அதனை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டு-கொழும்பு இரவு கடுகதி புகையிர சேவை மீண்டும் ஆரம்பம்

**(ரீ.எல்.ஜவ்பர்கான்)**

**திருத்தப் பணிகள் காரணமாக கடந்த சில தினங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த மட்டக்களப்பிற்கும் கொழும்பிற்குமிடையிலான இரவு கடுகதி பாடும்மீன் புகையிரத சேவை மீண்டும் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புகையிரத நிலைய பிரதம அதிபர் ஏ.பேரின்பராசா தெரிவித்தார்.**

**தினமும் இரவு 8.15 மணிக்கு மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும் பாடும்மீன் கடுகதி புகையிரத சேவை புணாணைக்கும் வெலிகந்தைக்குமிடையில் புகையிரத பாதையில் பாலம் திருத்தப்பணிகள் காரணமாக இரவு 10.20 மணிக்கு பொலநறுவையிலிருந்து சேவையிலீடுபட்டு வந்தது.**

**தற்போது திருத்தப் பணிகள் நிறைவு பெற்றதையடுத்து மட்டக்களப்பிலிருந்து கொழும்பிற்கான நேரடி சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.**

**இதற்கமைய இன்றிரவு 8.15 மணிக்கு பாடும்மீன் புகையிரதம் கொழும்பு நோக்கி புறப்பட்டது.**

# ஓட்டமாவடி எக்டிவ் பிரண்ட்ஸ் அமைப்பால் சாதனையாளர்கள் கௌரவிப்பு






**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் 91 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் கல்விகற்ற எக்டிவ் பிரண்ட்ஸ் அமைப்பின் ஏற்பாட்டில் சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மீராவோடை அந்நூர் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் மிருக வைத்தியர் எஸ்.சித்தீக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தரம் ஐந்து புலமைப் பரிசில், க.பொ.த. சாதாரண தரம், கா.பொ.த உயர் தரம் ஆகியவற்றில் சாதனை படைத்த அமைப்பிலுள்ள உறுப்பினர்களின் பிள்ளைகள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், ஓட்டமாவடி தேசிய பாடசாலை அதிபர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் எம்.ரீ.எம்.பரீட், ஓட்டமாவடி தாருல் உலூம் வித்தியாலய அதிபர் எம்.எல்.பைசல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முப்படை மற்றும் போலிஸார் இணைந்து ரோந்து நடவடிக்கை






**(பாறுக் ஷிஹான்)**

முப்படை மற்றும் பொலிஸார் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் பரிசோதனை செயற்பாட்டினையும் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையின் அனைத்து நிர்வாக மாவட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடற்பரப்புகளில் பாதுகாப்பைப் பேணுவதற்காக நாட்டின் அனைத்து ஆயுதம் தாங்கிய முப்படையினருக்கும் அழைப்பு விடுக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை(22) அன்று வெளியிட்டிருந்திருந்தார்.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் கல்முனை ,சம்மாந்துறை ,சவளக்கடை ,மத்திய முகாம் பொலிஸ் நிலையங்கள், பெரிய நீலாவணை விசேட அதிரடிப்படை மற்றும் கல்முனை இராணுவ மகாம் உள்ளிட்ட இடங்களில் பணியாற்றும் பாதுகாப்பு தரப்பினர் இச்செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாட்டில் வெகுவாக அதிகரித்துவரும் கொரோனா அலையை கட்டுப்படுத்த இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஒரு கட்டமாக திடீர் சோதனைகளை முப்படையினர் உள்ளிட்ட பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இத் திடீர் சோதனையில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது,குடிபோதையில் வாகனம் ஓட்டுவது தொடர்பில் கண்காணிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்டு வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகள், முகக்கவசம் அணியாது சென்றவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு எச்சரிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மைந்தன் தேர்தலில் வெற்றிவாகை

**(வாஸ் கூஞ்ஞ)**

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சுவீஸ் நாட்டில் உள்ளுராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட தமிழர் ஒருவர் அதிகபடியான வாக்குகளைப் பெற்று அவ் மக்களின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



நான்கு வருடங்களுக்கு ஒரு முறை சுவீஸ் நாட்டில் நடைபெறும் உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் மன்னார் மாவட்டத்தின் பறப்பாங்கண்டல் கிராமத்தைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை கபிரியேல் என்பவர் போட்டியிட்டு இவ் மன்ற மக்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றியீட்டிய இவர் இந்த வருடமும் இவ் தேர்தலில் சமூக ஜனநாயக கட்சியின் சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டியபோதும் கடந்த தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட இம்முறை அதைவிட அதிகபடியான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்ற இவ் தேர்தலில் இவரின் வெற்றிக்கு சுவீஸ் நாட்டு மக்களே அதிகபடியான வாக்குகளை அளித்து வெற்றிவாகை சூட வழி வகுத்துள்ளார்கள் என அங்கிருந்து கிடைக்கும் தகவல் மேலும் தெரிவிக்கின்றன.

இவ் தேர்தலில் 40 உறுப்பினர்கள் தெரிவுக்காக ஐந்து கட்சிகளிலிருந்து 72 பேர் போட்டியிட்டதாகவும் இதில் சமூக ஜனநாயக கட்சியைச்சார்ந்த 1% உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.சந்தியாப்பிள்ளை கபிரியேல் சுவீஸ் நாட்டில் ஒரு மொழிபெயர்ப்பாளராகவும் அங்கு மன்னார் மறைமாவட்டத்துக்கு ஒரு பங்கை ஸ்தாபிப்பதற்கு காரணகத்தாவாக இருந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

அன்பான வாசகர்களுக்கு



சுபீட்சம்
நிகழ்நிலைப்பத்திரிக்கை
சிலவாரங்களுக்கு
வாரத்தில் திங்கள்,
புதன், வெள்ளி ஆகிய
தினங்களில்
மாத்திரமே வெளிவரும்.
உடனடிச்செய்திகளுக்கு
www.supeedsam.com
எனும் எமது
செய்தித்தளத்துடன்
இணைந்திருங்கள்